**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 232/2013 P.W. 2/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மிக்கேல்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. அருமை நாயகம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.09.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் கையொப்பம் செய்துக் கொடுத்தேன்.போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார் . இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 10.05.2012 ம் தேதி 11.30 மணிக்கு குளச்சல் உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் பங்கிராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

**இல்லை .**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No. 232/2013 P.W. 3/L.W.5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. டாக்டர். கோசல்ராம் சந்திரா** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. ரவீந்திரநாத் சந்திரன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.09.2023.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை :</u>**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

நான் தற்பொழுது முதன்மை குடிமை மருத்துவராக அரசு மருத்துவமனை தக்கலையில் பணியாற்றி வருகிறேன். 09.05.2012 ம் தேதி குளச்சல் மருத்துவமனையில் பணியில் இருந்த போது இரவு 08.45 மணிக்கு மரிய செல்லம்மாள், 65 வயதுடையவரை லீனா றோஸ் என்பவர் சிகிட்சைக்காக அழைத்து வந்தார். 09.05.2012 ம் தேதி அவர்களை தெரிந்த நபர்கள் காலால் மிதித்து 07.00 மணி அளவில் கருங்கல் ஜங்சனில் வைத்து உதைத்து கீழே விழுந்துள்ளார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன

காயம் 1. இரத்துடன் கூடிய காயம் 3 x 2 செ.மீஅளவில் இடது கன்னத்தில் காணப்பட்டது.

காயம் 2. வலது இடுப்பை தூக்கி நடப்பதற்கு முடியவில்லை என்று கூறினார். அவரால் உண்மையில் நடக்க முடியவில்லை. அவரது இரத்த அழுத்தம், இதய துடிப்பு சீராக இருந்தது. எனவே அவரை மேல் நடவடிக்கைகாக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக பரிந்துரைத்தேன். 09.05.2012 அன்று அட்மிட் செய்யப்பட்டு 08.06.2012 அன்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். அவருக்கு நுண்கதிர் படம்

எடுக்கப்பட்டதில் அவருக்கு Intertrochantric fracture right feamer இருந்ததாக குறிப்பிட்டு அதற்கு சிகிட்சை அளித்துள்ளார். எனவே, கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். மேற்படி கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

ஒரு நபர் கீழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. காயத்தின் வயது குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் உள்காயம் என்பதால் குறிப்பிடப்படவில்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.